REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 21உ புதன் (7—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 22உ வியாழன் (8—12—55) [இதழ் 150

காசி கோயில்களில் நுழைய தாழ்த்தப்பட்டோருக்குத் தடை!

காசி, டிச. 5—

இங்குள்ள பிரசித்தி பெற்ற விசுவநாதர், அன்னபூரணி ஆதி விசுவேசுவரர் ஆலயங்களுக்கு சுமார் 100 தாழ்த்தப்பட்டவர்கள் சென்றபோது, அவர்கள் அந்த ஆலயங்களுக்குள் நுழையக்கூடாது என்று நிர்வாகிகள் தடுத்துவிட்டனராம்!

தாழ்த்தப்பட்ட மக்களை, விசுவாமித்திரா என்ற தாழ்த்தப்பட்ட வகுப்புத் தோழரே அழைத்துச் சென்றிருக்கிறார். இந்த நூறு பேரில் ஏழு பெண்களும் இருந்தார்கள் என்றும், அவர்களில் ஒருவருக்கு எழுபது வயது என்றும் கூறப்படுகிறது.

தென்னாட்டில் வெள்ளக் கொடுமை

இந்தியப் பேரரசின் இரக்கமற்ற போக்கு!

ஒப்புக்குக்கூட ஒரு இரங்கல் அறிக்கை இல்லை!

நிவாரண வேலைகளில் தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபடுகின்றனர்

சென்னை, டிச. 7—

தமிழகத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டதுடன், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான கால்நடைகள், உணவுப் பயிர்கள், வீடுகள் முதலியவற்றையும் கோரப் புயலும், கொடுமழையும் பாழ் செய்த சோகம் குறித்து, இன்று காலைவரைகூட இந்தியப் பேரரசின் மூலவர்கள், தங்களின் சம்பிரதாய அனுதாபத்தைத் தெரிவித்ததாகக் காணோம்.

நாளையதினம், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் டெல்லி ராஜ்யங்கள் சபையில், தென்னாட்டில் புயல் வெள்ளக் கொடுமை குறித்து அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப் போகிறாராம்; அதுவும், தென்னாட்டு உறுப்பினர் ஒருவர், 'இந்தக் கொடுமையின் இப்போதைய நிலை என்ன? மாநில, மத்திய சர்க்கார்கள் எந்த அளவு நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்?'—என்று கேள்வி கேட்ட பிறகே, இந்தியப் பேரரசின் சார்பில் ஒரு மந்திரி அது குறித்து தகவல் சேகரித்து அறிக்கை தருவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளச் சேதங்களின் மதிப்பு இன்னும் அதிகாரபூர்வமாகச் சேகரிக்க முடியவில்லை என்றும், இன்னமும் பரமக்குடிக்கும்—இராமநாதபுரத்திற்கும் இடையே போக்குவரத்து எதும் சாத்தியமில்லாத வரையில் 20 மைல் நீளத்திற்கு ஒரே வெள்ளக்காடாக இருப்பதாயும் தெரியவருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் வேதாரண்யத்தில் மட்டும் பலிகொள்ளப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை 25—என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சையில் நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டபோது திடுக்கிட்டுப் போய்விட்டதாயும், புயலும் பெருமழையும் விளைவித்துள்ள சேதம் அபரிமிதமானது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய இடங்களில் செய்திப் போக்குவரத்தைக் கவனிக்க போலீஸ் கம்பி இல்லாத் தந்தி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

வீடு, மரம் முதலியன வீழ்ந்து நசுங்குண்ட பலரின் சோகச் செய்திகள் உள்ளத்தை உலுக்குவனவாயுள்ளன

சாதாரணமாக, அதிகாரிகளுடன் போலீசாரும் நிவாரண வேலைகளில் ஆங்காங்கு ஈடுபட்டிருக்கின்றனர்.

பரமக்குடி வந்துசேர்ந்த காமராசர், அழுது புலம்பும் மக்களைக் கண்டபோது மிக வருந்தியதாயும், எல்லா நிவாரணங்களும் தரப்படும் என்று உறுதி தந்துள்ளார் என்றும் தெரிகிறது.

இராமநாதபுரம், பரமக்குடி ஆகிய ஊர்களிலும், இடையில் உள்ள ஊர்களிலும் தத்தளிக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

புதுக்கோட்டை பகுதி மக்களுக்கு ஆறுதல்

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் நடவடிக்கை

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அன்பில் தருமலிங்கம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர் திரு ராமய்யா, திருச்சி மாவட்ட மன்ற துணைத் தலைவர் திரு. வி. எ. முத்தய்யா, சீரங்கம் டாக்டர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் 4—12—55 காலை புதுக்கோட்டை நகரப் பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்கள்.

பிற்பகல் 2-மணிக்கு மாவட்ட மன்ற துணைத் தலைவர் திரு. வி.எ. முத்தய்யா அவர்களும், மாவட்ட மன்ற உறுப்பினரும் தி. மு. கழகச் செயலாளருமான அன்பில்-தர்மலிங்கம் அவர்களும் ஆலங்குடி, கரமபக்குடி, மற்றும் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களையும், மக்களையும் பார்த்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்ததோடு, வீடு இழந்த மக்கள் அனைவரையும் மாவட்ட மன்றத்திற்குச் சொந்தமான உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப் பள்ளி, மற்றுமுள்ள கட்டிடங்களில் தங்குவதற்கும் அனுமதியளித்து ஆவன செய்து வந்தார்கள்.

'புயல் வெள்ள நிவாரணத்திற்கு சென்னை நகரசபை உதவவேண்டும்'

தோழர் முனுசாமி அவசரத் தீர்மானம்

சென்னை, டிச. 6—

"தமிழ்நாட்டில் புயல் கொடுமையினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காகச் சென்னை நகரசபை ரூ.15,000 வழங்க வேண்டும்,"

என்று கூறும் அவசரத் தீர்மானம் ஒன்றை சென்னை 9-வது வட்ட தி. மு. கழகச் செயலாளரும், நகரசபை உறுப்பினருமான தோழர் வி. முனுசாமி அவர்கள், 'அறிவிப்பு' கொடுத்துள்ளார்.

இத்தீர்மானத்தை 9-ம் தேதியன்று நடைபெற இருக்கிற நகரசபை உறுப்பினர் கூட்டத்தின்போது அவர் பிரரேபிப்பார்.

பெல்லாரி கிளர்ச்சி: 856 பேர் கைது!

பெல்லாரி, டிச. 5—

'பெல்லாரி வட்டத்தை ஆந்திரருக்குத் தரக்கூடாது' என்று கோரி கடந்த நவம்பர் 16-ந் தேதி முதல் 'அகண்ட கர்நாடக இராஜ்ய நிர்மாண பரிஷத்' நடத்தி வரும் கிளர்ச்சி நீடித்துக்கொண்டிருப்பதுடன் இதுவரை 856 பேர்கள் கிளர்ச்சியை ஒட்டி கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

நேற்றும், இன்றும் ஆக இரு நாட்களில் மட்டும் 148 பேர், கிளர்ச்சியிலீடுபட்டதாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாநிலக் குழுவினரின் பரிசுக்கு எதிராக நடைபெறும் இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமாகி வருவது குறிப்பிடத்தக்கது.

தடை உத்தரவை மீறிய 6-பேர் கைது!

பாடியாலா, டிச. 6—

இந்நகரில் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை மீறி, 'இமாசலப் பிரதேசம், பெப்சு இரண்டையும் சேர்த்து, புதிய மாநிலத்திற்கு பாடியாலாவைத் தலைநகராக்க வேண்டுமென்பதற்காக, சட்டசபைக் கட்டிடத்தின் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்ததின் விளைவாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தலைமைக் கழகம்: அறிக்கை 33/55

புயல் நிவாரணம்

கடும் புயலாலும், பெரு மழையாலும் தாக்கப்பட்டு தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மீளாப் பெருங்கேடுகளுக்கு ஆளாகியிருக்கும் செய்தி நம்மையெல்லாம் திடுக்கிட வைத்துத் திகைப்படையச் செய்கிறது. புயற்காற்றும், வெள்ளமும் நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களை வவ்வி, ஆயிரக்கணக்கானவர்களை ஊனப்படுத்திப், பதினாயிரக்கணக்கானவர்களைத் திக்கற்றவர்களாகத் திரிய வைத்துக், கோடிக்கான ரூபாய் விலை மதிப்புள்ள பயிர்பச்சைகள்—மரஞ்செடிகள்—தோட்டந்துறவுகள்—வீடுகள் — பெருங்கட்டிடங்கள் — உணவுப்பொருள்கள் — கால்நடைகள் ஆகியவற்றைப் பாழாக்கியிருப்பது, தமிழகம் தாங்கிக்கொள்ள முடியாத பெருந் துக்கமும் துயரமும் நிறைந்த செய்தியாகும்.

புயலால் பாதிக்கப்பட்டு வாடுபவர்களுக்கும், உற்றார்-உறவினரை இழந்து வருந்துபவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்க நிவாரணமளிக்க அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளும், சென்னை அரசாங்க முதலமைச்சர் அவர்களும் முன்வந்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது சற்று ஆறுதலளிக்கக்கூடியதாக இருக்கிறது சென்னை அரசாங்கம் மிகத் தீவிரமான நிவாரண நடவடிக்கைகளில் மேலும் இறங்க வேண்டும் என்று சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதோடு, இந்தியப் பேரரசு சென்னை அரசாங்கத்துக்குப் பக்கத்துணையாக இருந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியப் பேரரசை வற்புறுத்திக்கேட்டுக்கொள்கிறோம்.

புயலால் தாக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத் தோழர்களும் ஆங்காங்கு ஏழை எளியவருக்கு உதவி செய்யும் நிவாரண வேலைகளில் உடனடியாக இறங்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பிற மாவட்டங்களிலுள்ள கிளைகளும், கழகத் தோழர்களும், உணவு—உடை-உறையுளுக்கு வேண்டிய பொருள்கள்—பணம் ஆகியவற்றைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உரியவர்கள் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிவாரண வேலைகளில் பிற பொதுநல ஊழியர்களோடும், பிற கட்சியினரோடும் இணைந்து நின்று பணி புரிய வேண்டி ஏற்படின், அந்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புயல் நிவாரண நிதிக்கு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சென்னை முதலமைச்சரிடம் ரூ. 1,000 (ஆயிரம்) அனுப்பப்பட்டிருக்கிறது.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன

"அறிவகம்", சென்னை-13
7—12—1955

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

பசுஞ்சாணத்திலிருந்து எரிவாயு!

புதுடில்லி, டிச. 6—

பசுஞ்சாணத்திலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்திய பரிசோதனைகள் வெற்றி தந்துள்ளன என்று கூறப்படுகிறது.

தோழர் மனர் என்பாரின் கேள்விக்கு ராஜ்யங்கள் சபையில் பதிலளிக்கையிலேயே விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் இந்த தகவலைத் தந்திருக்கிறார்.

'நீரா'வை சர்க்கரையாக மாற்ற முடியும்?

'நீரா'வை சர்க்கரையாக மாற்ற முடியுமா என்பது குறித்துப் பரிசோதனை செய்து பார்க்க ஆந்திர சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7—12—'55 புதன்

பொறுப்பற்றவர்கள் !

★

இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று நிலவும் ஆட்சி முறையில், மிகுதியான அதிகார பலம் கொண்டிருப்பது மக்கள் சபை தான். இந்தச் சபையிடம் தான், 'இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் எப்படி வாழ வேண்டும்' என்று, அவர்களது தலை விதியை நிர்ணயிக்கிற உயரிய பெருமையும், அதிகாரமும் மண்டிக்கிடக்கின்றன —அரசியல் சட்டப்படி!

ஆனல், மக்கள் சபையில் இடம் பெற்றிருக்கும் உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலானோர் இந்த நிலையை உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை. ஒவ்வொரு உறுப்பினரும் சில இலட்சம் மக்களின் பிரதிநிதியாக சபையில் இடம் பெறுகின்றனர். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் எண்ணங்களை சபையில் எதிரொலிப்பதற்காக, இந்த உறுப்பினர்கள் திங்கள் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான ரூபாய் சம்பளமும் பெறுகின்றனர்.

இந்த மக்கள் சபை உறுப்பினர்கள்தான், நிர்வாகத்தை நடத்தும் சர்க்காரின் ஒவ்வொரு சிறிய அசைவுக்கும் பொறுப்பானவர்கள். மக்கள் சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் கருத்துக்கு ஒப்பவே நிர்வாகம் நடைபெறுகிறது; சட்டங்களும் திட்டங்களும் உருவாகின்றன. அது தான் முறை. இந்த முறையையும், அதன் முக்கியத்துவத்தையும் இப்போதைய இந்திய மக்கள் சபையில் இடம் பெற்றிருக்கும் 'மகானுபாவர்கள்' உணர்ந்திருப்பதாயும் தெரியவில்லை.

பெரும்பான்மையினராக மக்கள் சபையில் உள்ள காங்கிரஸ் கட்சியினர், நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கு என்று சில தலைவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டதுடன் தங்கள் பொறுப்பும், கடமையும் முடிந்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மையினராக உள்ள எதிர்க் கட்சியினருக்கு, 'நாம் எத்தனை எடுத்துச் சொன்னாலும், பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் ஆட்சியினர் எடுத்துக் கொள்ளப்போவதில்லை,' என்ற தளர்ச்சி மேலிட்டுவிட்டிருக்கிறது என்று கூறத்தக்க வகையில் தான், இந்த ஆண்டு மக்கள் சபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருவோர் கருத வேண்டியிருக்கிறது.

மக்கள் சபையில் இடம் பெற்றிருப்போர் தங்களின் பொறுப்பையும், கடமையையும் உணராதிருக்கும் நிலை வளர்வது, ஒரு சிலரின் விருப்பத்திற்கு ஆட்சி நடக்கும் சர்வாதிகார நிலையை திருப்பி அழைப்பதாக அமையும் என்பதையும் இந்த உறுப்பினர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டில் மட்டும் கணக்கற்ற தடவைகளில், மக்கள் சபையில் 'கோரம்' இல்லை என்று சுட்டிக்காட்டப்படும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் நாம் இது குறித்து இங்கு எழுதியிருக்கிறோம்.

கடந்த கிழமையில், மக்கள் சபையில் 'கோரம்' இல்லாததின் விளைவாக, மிகப் பெரும்பான்மை பலம் கொண்ட காங்கிரஸ் சர்க்கார், முதல் தோல்வியை சபையில் அனுபவித்திருக்கின்றனர்.

அரசியல் சட்ட 7-வது திருத்த மசோதா ஒன்றை விவாதித்த பின்னர், சபையில் வாக்கெடுப்பு நடைபெற்ற போது, சபையில் 'கோரம்' இல்லாமற் போனதின் விளைவாக மசோதா நிறைவேறாது போயிற்று.

'உறுப்பினர்களின் பொறுப்பற்ற தன்மையின் விளைவுதான் இப்படி ஒரு சிக்கலை உண்டாக்கியது' என்று உணர்ந்த பிரதமர் நேரு, நிலைமை கண்டு தான் வருந்துவதாயும், இனி மேலாவது இந்நிலை ஏற்படாமலிருக்கவேண்டும் என்று கோரியும் மக்கள் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பிவைத்தார்.

ஆனல், இதுவும் பலன் தந்ததாகத் தெரியவில்லை. மூன்று நாட்களுக்கு முன்பு, சபையில் மீண்டும், 'கோரம்' இல்லாதது சுட்டிக்காட்டப்பட்டபோது, கூட்டத்திற்கு தலைமை வகித்த அனந்தசயனம் அய்யங்கார், 'இனியும் இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் சபையை ஒத்திவைக்க நேரிடும்,' என்று எச்சரித்திருக்கிறார். 'விசேடம்' என்னவென்றால், 'கோரம்' இல்லை என்று மணி ஒலிக்கப்பட்ட பின்னும், பலர் உலவிக் கொண்டிருந்தனராம்! என்னே, மக்கள் பிரதிநிதிகளின் பொதுநலப் பணி!

பல உறுப்பினர்கள், சபைக்கு வந்ததாக குறிப்பெழுதிவிட்டு, நகரில் தங்களுக்குள்ள இதர அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிடுவதும் வழக்கமாயிருந்து வருகிறது.

இந்த நிலையில்தான், இந்தியத் துணைக்கண்டத்தில் 'ஜனநாயகம்' நடைபெறுகிறது என்பதை எண்ணும்போது, இந்த நிலைக்குக் காரணமாயிருப்பவர்களை, 'மக்கள் துரோகி'கள் என்று அழைப்பதினல் தவறேதுமிருக்காது என்றே தோன்றுகிறது.

சட்டசபை, மக்கள் சபை நடவடிக்கைகளில் போதுமான அக்கறை காட்டாத உறுப்பினர்களின் பெயர்களை சபைத் தலைவர்கள் வெளியிடுவார்களேயானல், அந்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள், உறுப்பினர்கள் விஷயத்தில் எதிர்காலத்திலேனும் எச்சரிக்கையாயிருப்பார்கள்— உறுப்பினர்களும் பொறுப்புடன் நடந்துகொள்வார்கள் என்ற ஒரு யோசனையை, சர்க்கார் பரிசீலிக்க வேண்டுமென விழைகிறோம்.

வறுமைக்குக் காரணம் என்ன?

காங்கிரஸ் தலைவர் கண்டுபிடித்தார்

நாதியாத், டிச. 5—

"பெரிய கைத்தொழில்களினல் இந்தியாவில் வறுமைதான் ஏற்பட்டது; அதனல், செல்வம் ஒரே இடத்தில் குவிந்து போவதற்கும் ஏதுவாயிற்று. நாட்டில் நிலவுகின்ற ஏழ்மையைப் போக்குவதற்கு உதவக் கூடிய தொழில்கள் குடிசைத் தொழில்களே ஆகும்."

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர்தான், இவ்வாறு, இங்கு நடைபெற்ற பெண்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறர்.

இரண்டாம் திட்டத்திற்கு வெளிநாட்டவர் நிதி உதவி

கிடைக்காமற் போகுமென பண்டித நேரு பீதி

புதுடில்லி, நவ. 6—

"தற்போதைய நாட்களில் நடைபெற்று வருகிற சிற்சில காரியங்களைக் கவனிக்கும் போது, நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிக்கோள்வதற்குத் தேவையான அளவிற்கு வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்க இயலாது என்று உணருகிறேன்,"

என்று, இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்.

அம்பர் சர்க்காவை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிப்பதற்காக அக்கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அப்போது, மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக், அம்பர் சர்க்காவை விரிவுபடுத்துவதானல் அதற்கு ஏற்படக்கூடிய புதுப்புது செலவுகள் குறித்துக் கவலைப்பட்டாராம்.

இது குறித்துப் பேசுகையில் பிரதமர் நேரு அவர்கள், நிதி நிலைமை முக்கியமான ஒன்றுதான் என்பதைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும், சர்க்கார் தயாரித்துள்ள இப்பெரிய திட்டத்திற்கு வெளி நாடுகளிலிருந்து ஏராளமான உதவி தேவை என்றும், அப்படிப்பட்ட வெளிநாட்டு உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் திட்டங்கள் தீட்டப்பட்டன என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

'இப்போது நடைபெறுகிற சம்பவங்களினல் நமக்கு அன்னிய உதவி கிடைக்கும் என்று நம்புவதற்கில்லை' என்று மட்டும்தான் பிரதமர் கூறியிருக்கிறரே தவிர, இது பற்றிய விரிவான விளக்கம் எதுவும் அவர் தரவில்லை என்பதும் இங்கு கருதத்தக்கது

அளிக்கும் உதவியை மாற்றும் உத்தேசம் அமெரிக்காவுக்கு இல்லையாம் !

மக்கள் மனதைக் கவருவதற்கே ரஷ்யா தந்திர முறைகளைக் கையாளுகிறதாம் !

அமெரிக்கா இன்று வெளிநாடுகளுக்கு அளித்துவரும் உதவியின் பொதுப்படையான அளவை, இன்றைய நிலையில், மாற்றும் உத்தேசம் இல்லையாம்! வெளிநாடுகளுக்கென ஆண்டிற்கு அனுமதிக்கப்படும் 270 கோடி 30 இலட்சம் டாலர் நிதியைக் கணிசமான அளவு குறைப்பது இன்றைய உலக நிலையில் இயலாது என்று தாம் நினைப்பதாக அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாக டைரக்டர் ஜான் பி. ஹாலிஸ்டர் கூறியுள்ளாராம்!

மத்திய கிழக்கிலும், தென் ஆசியாவிலும் மக்கள் மனதைக் கவர்வதற்கு சோவியத் செய்யும் முயற்சி தீவிரமாகியிருப்பதும், அப்பிரதேசங்களுக்குப் பொருளாதார உதவி அளிக்க அவர்கள் வாக்குறுதி கொடுப்பதும் ஒரு 'தந்திர முறை'யாகும் என்றும், இதை நன்கு கவனித்து வரவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே சோவியத் ரஷ்யா உதவியளிப்பதாக அதிகம் பேசி வந்துள்ளதாயும், ஆனல், உதவியளித்தது சொற்பம்தான் என்றும் அவர் கூறியுள்ளாராம்.

"சோவியத் ரஷ்யா ஓரிடத்தில் ஒரு யோசனை சொன்னதும், அதையும்விட மேலான இன்னெரு யோசனையுடன் நாம் செயலாற்ற வேண்டும் என்பது முடியாத காரியம்; அப்படியானல், சோவியத் ரஷ்யா, தான் ஒரு காசும் செலவு செய்யாமலேயே நமக்குப் பெருத்த செலவு இழுத்து விடுவதாய் முடியும்; அது இன்னெரு வகை வலையில் விழுவதே ஆகும். பல ஆண்டுகளாக அந்தப் பிரதேசத்துக்குப் பெரும்பாலும் மானியமாகவும், சிறிதளவு கடனாகவும் பலகோடி டாலர் உதவியளித்து உருவாக்கிய உருப்படியான நடைமுறைக் கொள்கைகள் நமக்கு உண்டு; அந்தத் திட்டம் அங்குள்ள மக்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற உதவி செய்துள்ளது. இந்தப் பிரச்சினைகளில், உடனடியான நடவடிக்கைகளைக் காட்டிலும் நீண்ட காலத் திட்டமே நல்லது என்பது என் கருத்து."

என்றெல்லாம் அவர் கூறியுள்ளாராம்!

சென்னையில் கைத்தறி அபிவிருத்தி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மாநிலத்தில் கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக சென்னை சர்க்கார் சுமார் ரூ 4,33,00,000 செலவழிப்பதென உத்தேசித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தொகை முழுவதும் கீழ்க்கண்ட முறையில், இத்துறையில் செலவழிக்கப்படும் என்ற விபரமும் காணக் கிடக்கிறது :

கைத்தறி உற்பத்திப் பெருக்கம், கைத்தறித் துணிக்கு மார்க்கெட் வசதி செய்ய ரூ. 100 இலட்சம்.

கூட்டுறவு அம்சங்களில் நெசவாளரைச் சேர்ப்பதற்கு ரூ. 1,62,68,000.

நெசவாளர்களுக்குக் குடியிருப்பு வீட்டு வசதிகள் செய்ய ரூ. 70,36,000.

துணி விற்பனைக்கு 'ரிபேட்' வழங்குவதற்கு ரூ. 100 இலட்சம்.

இது தவிர, மாநில சர்க்கார், காலனி ஒன்றுக்கு 100 வீடுகள் வீதம் ரூ. 70½ இலட்சம் செலவில் 15 காலனிகள் கட்டுவதற்கும் உத்தேசம் கொண்டுள்ளனர் என்றும், இத்தொகையில் 3-ல் 1 பகுதித் தொகையை மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும், 25 நெசவாளர் சங்கங்களையொட்டி, சுமார் ரூ. 4 இலட்சம் செலவில் 'மாதிரி'கள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

உற்பத்தி முறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அதற்கான கருவிகள் இனமாகக் கொடுத்து உதவவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

மேலும், அத்தகு புதுமுறை உற்பத்தி பற்றி 2,000 நெசவாளர்களுக்குப் பயிற்சி தரப்படும் என்றும், இதற்காக மட்டும் ரூ. 41¼ இலட்சம் ஒதுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த எல்லா திட்டங்களுக்குமாக 1956-ல் ரூ. 1,01,20,000 செலவிடப்பட இருக்கிறதாம்.

எவ்வகையிலும் 1961-ம் ஆண்டு வாக்கில் 50 சதவிகித நெசவாளரையேனும் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டுவர முடியும் என்று சர்க்கார் நம்புகின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

4,700 பிரயாணிகள் இரயில் வண்டிகளாம் !

புதுடில்லி, டிச. 4—

சென்ற 1953-ம் ஆண்டிற்குப் பின்னர், இந்தியா முழுமையிலுமாக இந்திய இரயில்வேக்களில் 500 புது இரயில் வண்டிகள் விடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது, நாட்டில், தினம் ஒன்றுக்கு 4,700 பிரயாணிகள் இரயில் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றும், இவற்றுள் 3-ல் 1 பங்கிற்கு மேற்பட்ட வண்டிகள் அனைத்தும் நகர் சுற்றுப்புற வண்டிகள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா—போர்ச்சுகல் கூட்டறிக்கை

பண்டித நேரு கவலை

புதுடில்லி, டிச. 5—

"அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லசும், போர்ச்சுகல் வெளிநாட்டமைச்சர் பாலோ குன்ஹாவும் கூட்டாக அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையினல், 'பிரமாதமான விளைவுகள்' ஏற்படும்; நாம் சர்க்கார் என்ற முறையில், அந்த அறிக்கைக்கு அதிகாரபூர்வமான ஆதாரம் பெறக்கடமைப்பட்டிருக்கிறோம், அந்த ஆதாரங்களைப் பெற்ற பின்னர் மற்ற நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும். அதன் பின்னர்தான், அது குறித்து நமது கருத்தைத் தெரிவிக்க முடியும்"

என்று, இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் மக்கள் சபையில் கூறியிருக்கிறர்.

மக்கள் சபையில், நேரு பண்டிதரின் இந்த அறிப்பையொட்டி புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதுவர் இந்திய சர்க்கார் வெளிநாட்டு இலாகா அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு, கோவாவைப் பொறுத்த மட்டில் அவ்விருவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை ஆட்சேபித்து, இந்தியா மேற்கொண்டுள்ள மிக வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளும் குறிப்பொன்று தரப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த அறிக்கை பற்றி அமெரிக்க இராஜாங்க விளக்கம் கேட்டுத் தெரிவிக்கும்படி அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவரைக் கேட்டுக்கொண்டும் சர்க்கார் செய்தி அனுப்பியிருக்கிறதாம்.

கவலை உருவாகிறது !

கோவா பற்றி அமெரிக்கா தனது நிலைமையை உடனே தெளிவுபடுத்தாவிட்டால், இந்திய —அமெரிக்க உறவு மோசமாகி விடுமே என்ற கவலை அமெரிக்க இராஜதந்திர வட்டாரத்தினரிடையே உருவாகி வருகிறதாகவும் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

கேட்பாரில்லையாம்!

1954—55-ம் ஆண்டில், சுமார் 1,36,02,000 தபால் சாமான்கள், கேட்பாரின்றி, 'டெட் லெட்டர்' காரியாலயத்திற்கு வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பெங்களூரில் சிறப்புக் கூட்டம்

கருணாநிதி, சிற்றரசு சொற்பொழிவு

மாநில மாநாட்டு நிதிக்காக, 27—11—55 மாலை 4-30 மணிக்கு, சர். கே. பி. புட்டண்ண செட்டி நகர் மண்டபத்தில், தோழர் எஸ். வி. பதி தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, போளூர்-சுப்பிரமணியம், முல்லை-சத்தி, கலச. சத்தியநாராயணா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மண்டபம் நிறைய மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

மாநில மாநாட்டு நிதிக்காக பெங்களூர் மாவட்டம் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ 400-யும், தோழர் எஸ். வி. பதி தோழர் மு. கருணாநிதியிடம் கொடுத்தார்.

தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் 'கலை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தோழர் மு. கருணாநிதி பெங்களூர் மாவட்டம் பல இன்னல்களுக்கிடையே எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டியும், தி. மு. கழகம் சென்ற ஆறு ஆண்டுகளாக மக்களுக்குச் செய்துவரும் தொண்டினை விளக்கியும், அவசியம் ஏற்படும் போது ஏழை எளியவரிடமிருந்து நிதி திரட்டி பல அரிய வேலைகளுக்கு அதனைப் பயன்படுத்தியுள்ளதையும், திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாடு பல முக்கியமான பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவெடுக்குமென்றும், மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

★

மாநில மாநாட்டிற்கு பாலக்காடு தி.மு.க. நிதி

வருகிற ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தின் போது, அவரை அவர்களிடம் மாநில மாநாட்டுக்கு பாலக்காடு கிளை தி. மு. கழகச் சார்பில், ரூ. 500 நிதி கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

10—11—55ல் மாநில மாநாட்டு நிதிக்காக நடைபெற்ற எம். ஜி ஆர். நாடகத்தின் மூலம் வசூல் ரூ. 3,631—12—0; செலவு ரூ 3,185—15—0 ஆக, ரூ. 445—13—0 இருப்புத் தொகை கிடைத்துள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பண்டைத் தமிழர் மொழிப் பற்றும்-கல்வி முறையும்

அரசினர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கருத்து

புதுக்கோட்டை, நவ. 5—

"சங்க காலத்தில் சிற்பம், ஓவியம், இசை, கட்டிடம், மருத்துவம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழியே முதலிடம் பெற்று விளங்கி இருந்ததென்பதை இலக்கியங்கள் மூலம் அறியலாம். அதுபோல் இக்காலத்திலும், எல்லாத்துறைகளிலும் தமிழ் மொழி முதலிடம் பெறின், நாம் சீரும் சிறப்பும் பெற்று ஓங்குவோமென்பது உறுதி. பண்டைத் தமிழர் கல்வி முறையை எண்ணும் பொழுதே உள்ளம் இறும்பூதெய்துகிறது. உலகில் நாகரீகம் பரவா நாளிலே நம் நாட்டில் கல்வியும், கல்வி கற்பிக்கும் முறையும் சிறந்திருந்தது. முன்னர் வாழ்ந்த மக்கள் தேன் மொழியைச் சிறப்பாகப் பயின்று தேர்ந்த பின்னர் வடமொழியை விருப்ப மொழியாகக் கற்று, அதன் சிறப்பையும், தமிழின் சிறப்பையும் அறிந்தனர். ஒரு மொழியின் சிறப்பையும், உயர்வையும் அறிய வேண்டின் பிறிதொரு மொழியைக் கற்றுத் தேற வேண்டும். அதனால்தான் நம் புலவர் பெருமக்களில் பலர் வடமொழியையும், வேறு மொழியையும் கற்றுத் தேர்ந்தனர். பிற மொழியைக் கற்ற காரணத்தினால் தன் தாய் மொழியாம் தமிழை வெறுக்கவும் இல்லை — இகழவும் இல்லை; ஆனால், இன்று, பிற மொழி கற்ற பலர், தமிழ் மொழியை வெறுத்தொதுக்கும் காட்சியைக் காண்கின்றோம்; இச்செயல் வருந்தற்குரியதே!"

என்று, உயர்திரு. கே. எம் கே. அப்துல்காதிர் அவர்கள் (துணை விரிவுரையாளர், அரசினர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை) 'பண்டைத் தமிழர் கல்வி முறை' எனும் தலைப்பில், திருக்குறள் கழகச் சார்பில் 27—11—55-ல் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

'கட்டாயமாக அமுல் செய்ய வேண்டும்'

'விரிவுபடுத்தும் உத்தேசம் தற்போது கிடையாது'

சுகாதார வசதித் திட்டம் பற்றி நேரு, அமிர்த கௌரி

புதுடில்லி, டிச. 5—

"மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கான சுகாதார வசதித் திட்டம் மேலும் மேலும் விரிவுபடுத்தப்படும். இந்தியாவில் உள்ள எல்லா குடிமக்களும் அத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும் வரையிலும் அத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டேதான் இருக்கும்."

என்று, மக்கள் சபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறுகையில் பிரதமர் நேரு இவ்விதம் கூறிவிட்டு, 'இத்தகு திட்டங்கள் எல்லாம் கட்டாயமாக அமுல் நடத்தப்படுவதுதான் நல்லது; இல்லாவிடின் அவைகள் தோல்விதான் காணும்,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது குறித்து முதல் முதலில் பேசிய மத்திய சுகாதார அமைச்சர் திருமதி ராஜ்குமாரி அமிர்த கௌரி, "மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கான இந்த சுகாதார வசதித் திட்டத்தை மத்திய சர்க்கார் ஊழியர் அல்லாதவர்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் எதுவும் சர்க்காருக்கு தற்போது கிடையாது" என்று கூறியிருக்கிறார்.

திருமதி சன்யாட்–சென் இந்தியா வருகிறார்

புதுடில்லி, டிச. 5—

செஞ்சீனத்தின் மத்தியக் காங்கிரஸ் நிரந்தரக் குழுவின் துணைத் தலைவியான திருமதி சன்யாட்-சென் அம்மையார், விரைவிலேயே இந்தியாவிற்கு வருகை தரலாம் என்று அதிகாரபூர்வமான தகவல்கள் கூறுகின்றன.

தலைமைக் கழகம்: அறிக்கை—32/55

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1955 டிசம்பர்—1956 சனவரி

ஆகிய இரண்டு திங்களும்

உறுப்பினர் சேர்க்கும் காலமாகும்

[சில முக்கியமான திருத்தங்களோடு, 31/55 என்ற அறிக்கை 32/55 அறிக்கையாக வெளியிடப்பெறுகிறது. இதையே இனி நடைமுறைக்கு ஏற்றுக்கொள்க.]

(1) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

(2) இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குள் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், 1956 பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து தி. மு. கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்படமாட்டாது; புதிய உறுப்பினர் என்றமுறையிலேயே நோக்கப்படுவர்.

(3) உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனால் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒருவர் பொறுப்பாளராக இருந்து பக்கத்துக் கிளைக் கழகச் செயலாளர், அல்லது அருகிலுள்ள மாவட்டப் பிரதிநிதி, அல்லது அருகிலுள்ள பொதுக் குழு உறுப்பினர் ஆகிய ஒருவரின் அறிமுகத்தின் பேரில் விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்று, உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ளலாம்.

(5) கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக் கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள், பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கிளைக் கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொள்ளலாம்.

(6) கிளைக் கழகச் செயலாளரும், கிளைக் கழகம் இல்லாத ஆனால் அமைக்கக்கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான் உறுப்பினர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(7) ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம். ஒவ்வொரு கிளைக் கழகமும் எவ்வளவு உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்கமுடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(8) ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக அணா 8 செலுத்த வேண்டும்: ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணாவில் நான்கு அணாவைக் கிளைக் கழகம் வைத்துக்கொண்டு மீதி நான்கு அணாவை நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

(9) உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதிக் கட்டணத் தொகை) பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு கிளைக் கழகச் செலவில் அப்படியே அனுப்பிவைக்க வேண்டும்.

(10) விண்ணப்பத் தாளும், கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழகத்தின் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுப்பினர் உரிமைச் சீட்டை, உறுப்பினர், சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்க வேண்டும்.

(11) கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும், மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பிவைக்கப்பெறும்.

(12) பின்னால் எப்பொழுதாவது ஒரு கிளைக் கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள், உறுப்பினராய் இருக்கும் கிளைக் கழகச் செயற்குழுவின் அனுமதிச் சீட்டோடு, தனியே நான்கு அணாவை தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக்கொள்ளவேண்டும்.

(13) எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக் கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

(14) பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்—பெண்கள் மட்டுமே தி. மு. கழகத்தில் உறுப்பினராகும் தகுதியடைந்தவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

"அறிவகம்,"
சென்னை—13
6-12-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

அரியலூரில்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

அரியலூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் கலந்துகொள்ள 29-11-55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் வந்து சேர்ந்தார்.

இரயில்வே நிலையத்தில் தி. மா. மு. கழகச் செயலாளர், நகர தி.மு. கழகச் செயலாளர் உள்ளிட்ட பல தோழர்கள் வரவேற்று மாவட்ட ஆட்சி மன்ற ஓய்வு விடுதிக்கு அழைத்துச் சென்றனர்.

மாணவத் தோழர்களும், நகர தி மு. கழக நிர்வாகிகளும் துணைப் பொதுச்செயலாளரிடம் கழக சம்பந்தமான விஷயங்களைப் பற்றிக் கலந்து பேசினர்.

அன்று மாலை 6-30 மணிக்கு, துணைப் பொதுச்செயலாளர் அவர்கள் தேர்முட்டி அருகில் தி. மு. கழகக் கொடியினை ஏற்றிவைத்த பின், அங்கிருந்து ஊர்வலமாகக் கூட்டம் நடைபெறும் இடமாகிய 'பெட்ரோல் பங்க்' எதிர் திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில் மாணவத் தோழர்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர்.

துவக்க விழாவிற்கு மாணவத் தோழர் நா. சி. கோவிந்தசாமி தலைமைதாங்கினார்.

தோழர்கள் கோ. சிவப்பெருமான், கு. தங்கவேலு ஆகியோர் பேசிய பின், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் 'தி மு. கழகமும், மாணவர் கடமையும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

துணைப் பொதுச்செயலாளருக்கு அரியலூர் தி. மு. கழகம், தி. மா. மு கழகம், மூங்கில்பாடி தி. மு. கழகம், அரியலூர் இளைஞர் மன்றம் ஆகியவைகளின் சார்பில் கைத்தறித் துணிகள் அணிவிக்கப்பட்டன.

* * *

நல்லான்பிள்ளைபெற்றுனில் தி. மு. க. துவக்கவிழா

தெ ஆ. மாவட்டம் நல்லான் பிள்ளைபெற்றுனில், தி. மு. கழகத் துவக்க விழா கூட்டம், 3-12-55 மாலை 6 மணிக்கு, கடைவீதி அடுத்த திடலில் நடைபெற்றது.

தோழர் வரதராசன் தலைமை வகித்தார்.

தோழர் கோ. கோவிந்தசாமி அவர்கள், துணைப் பொதுச்செயலாளரை வரவேற்றுப் பேசினார்.

அடுத்து தோழர்கள் ஜெயவேல், அருணகிரி ஆகியோர் பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழகத்தைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினார். துவக்கத்தில் தி. மு கழகக் கொடியும் துணைப்பொதுச்செயலாளரால் ஏற்றிவைக்கப்பட்டது.

'மாதிரி' உற்பத்தி நிலையம் ஏற்படுத்தப்படுமாம்!

ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிப்பதற்கும் திட்டமாம்!

சென்னை, டிச 4—

மேற்கத்திய முறையில் செருப்பு பூட்சுகளை உற்பத்தி செய்வதற்காகத் திருவல்லிக்கேணியில் ஒரு மாதிரி செருப்பு - பூட்சு உற்பத்தி நிலையமொன்று ஏற்படுத்தப்படும் என்றும், இதற்கான திட்டத்திற்கு சர்க்கார் அங்கீகாரமளித்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

புதிய ரகங்களையும், 'மாதிரி'களையும் மக்களிடையே பரவச் செய்து செலவைக் குறைத்து, தரத்தை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாம்.

இதில் 12 பேருக்கு பயிற்சி தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கு, மாதம் ரூ. 25 'உபகாரச் சம்பளம்' தரவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நிவாரண வேலைகளில் தி. மு. கழகத் தோழர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு விமான மூலம் சுமார் 6 டன் உணவுப் பொருள்கள் போடப்பட்டிருக்கின்றன

மேலும், இலங்கை, தூத்துக்குடி போன்ற இடங்களிலிருந்து கடல் வழியாக, மண்டபத்திற்கு உணவுப் பொருள்கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மராமத்து மந்திரி சேதுபதியும் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு விரைந்திருக்கிருர்.

வீடிழந்தோருக்கு வீடு கட்டித் தரவும் சர்க்கார் ஏற்பாடு செய்து வருவதாயும் நிதிமந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிருர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இப்போது மண்ணெண்ணெய், விறகு, அரிசி முதலியனவற்றின் விலை, விஷம் போல ஏறிக்கொண்டிருப்பதாக செய்தி ஒன்று கூறுகிறது.

நிவாரணத்திற்கென நிதியும், பணியும் திரட்டும் வேலையில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

மலேயா தமிழ் தினசரியான 'தமிழ் நேசன்', சென்னை தமிழ் தின இதழ் 'தினமணி' ஆகியவை நிவாரண நிதி திரட்டிவருகின்றன

ராமகிருஷ்ண மிஷன் நிவாரண வேலைக்காக தொண்டர்களை ஈடுபடுத்துகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பலருடனும் சர்க்காருடனும் இணைந்து நிவாரண வேலைகளில் ஈடுபடுமாறு பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்துடன் முதன் மந்திரியிடம் தி. மு. கழகச் சார்பில் நிவாரணத்திற்கென பொதுச்செயலாளர் ஆயிரம் ரூபாய் அனுப்பி வைத்திருக்கிருர்.

★

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிக்கை

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் கீழ்க்காணும் அறிக்கையை விடுத்துள்ளார் :—

30—11—55ல் திடீரென வீசிய புயலால் பாதிக்கப்பட்ட திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை பகுதி மக்களுக்கு மாவட்ட தி. மு. கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1—12—55 அன்று புயலால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை நகரப் பகுதியையும், ஆலங்குடி, கரம்பக்குடி பகுதிகளையும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர் திரு வி. ராமையா, மாவட்ட மன்றத் துணைத் தலைவர் திரு. வி. ஏ. முத்தையா, திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி செயலாளர் டாக்டர் வி. சுப்பிரமணியம் அவர்களும் பார்வையிட்டோம் புயலால் பாதிக்கப்பட்டு, வீடு இழந்து, உணவின்றி வாடும் மக்கள் படும் அவதியைப் பார்க்க சகிக்கவில்லை.

உள்ளூர் பிரமுகர்களும், திருச்சி மாவட்டக் கலெக்டர் திரு. ஆர் எஸ். மலையப்பன் அவர்களும் செய்துவரும் பேருதவி போற்றற்குரியது. கலெக்டர் அவர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் சென்று உடனடியாக நிவாரணம் அளிப்பது, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரிதும் ஆறுதல் அளித்துவருகிறது. இருந்தாலும், சர்க்கார் உடனடியாகத் தலையிட்டு, வீடிழந்து தவிக்கும் மக்களுக்கு, வீடு கட்டிக் கொடுக்கவும், உணவின்றி வாடும் ஏழைகளுக்கு உணவு அளிக்கவும், நிரந்தர ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

அன்றியும், வீடிழந்து வாடும் ஏழை அரிசன மக்களுக்கும், மற்ற ஏழை பிற்பட்ட மக்களுக்கும், சர்க்கார் தற்சமயம் வீடு கட்டிக்கொள்ள உதவும் சிறு தொகையோடு, மற்றுமொரு சிறு தொகையைக் கடனாகக் கொடுத்தும் உதவி, நல்லமுறையில் அவர்கள் வீடு கட்டிக் கொள்ள உதவ வேண்டும்.

அரிசனங்களுக்கு வீடு கட்ட கடன் கொடுக்க சர்க்கார் உத்திரவிருந்தும் இதுவரை கடன் பட்டுவாடா செய்யவில்லை ; இதற்குக் காரணமாக 'அவர்களுக்குக் கடன் பெறத் தக்க ஜாமீன் கொடுக்க இயலவில்லை,' என்பதேயாகும் என்று கூறுகிறார்கள்.

சர்க்கார் உடனடியாக, ஜாமீன் கொடுக்க இயலாத அரிசன மக்களுக்கு, அவர்கள் வீடு கட்டும் அடி மனையையும், கட்டப்படுகிற வீட்டையும் ஜாமீனாக வைத்துக் கொண்டு அவர்களுக்குக் கடன் உதவி அளிக்கவேண்டும். தக்க காலத்தில் இந்தப் பேருதவியை செய்தால், 'அரிசன முன்னேற்றத்திற்காகச் செய்கிறோம்,' என்று சர்க்கார் சொல்லும் உதவிகளில், இது தலையாய உதவியாக இருக்கும்.

தற்சமயம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க திருச்சி மாவட்ட தி. மு. கழகச் சார்பில் எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்ளை சம்பளம்

பெறும் பாங்கி அதிகாரிகள்

சிக்கல் குறித்து சர்க்கார் பரிசீலிக்கிறதாம்!

புதுடில்லி, டிச. 6—

பாங்கி நிறுவனங்களில் அதிகாரிகளுக்குத் தரப்பட்டுவரும் கொள்ளைச் சம்பளங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து கஜேந்திரகட்கார் குழு தந்துள்ள சிபாரிசு குறித்த சர்க்கார் இன்னும் பரிசீலித்து வருவதாக மக்கள் சபையில் மந்திரி ஏ. சி. குஹா தெரிவித்திருக்கிருர்.

"குழுவின் சிபாரிசை அப்படியே ஏற்றுக்கொண்டோம் என்று கூறுவதற்கில்லை ; ரிசர்வ் பாங்கியுடன் இது குறித்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்," என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்திருக்கிருர்.

"இது ஒரு சிக்கலான விஷயம்; தொழிலின் ஒரு பிரிவினருக்கு மட்டும் வருமான எல்லை நிர்ணயிப்பது கடினமானதாகும் ; ஏனெனில், இதர வர்த்தகத் தொழில் நிறுவனங்களில் கொழுத்த சம்பளம் வாங்குவோர் ஏராளமானவர்கள் இருக்கின்றனர்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

"இது குறித்து சர்க்கார் எப்போது இறுதி முடிவு மேற்கொள்ளும் என்றும் சொல்வதற்கில்லை," என்று மந்திரி தகவல் தந்திருக்கிருர்.

திராவிடத்தில்

மண்ணெண்ணெய் ஊற்று ?

திருநெல்வேலி, டிச. 6—

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாசமுத்திரம் தாலுகாவிலிருக்கும் கல்லிடைக்குறிச்சி எனும் ஊரில், நிலக்கரிப் படிவங்களும், மண்ணெண்ணெய் ஊற்றுகளும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பாரது நிலம் ஒன்றில், ஒரு கிணறு வெட்டப்பட்டபோது, 20 அடி ஆழத்தில் எண்ணெய் ஊற்றும், நிலக்கரி படிவமும் இருந்ததாகவும், உடனே நிலவரி இலாகா அதிகாரிகளுக்கு இது குறித்துத் தகவல் தரப்பட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டமும், நவம்பர் திங்களும்!

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நவம்பர் திங்கள் என்றால் குலை நடுக்கமெடுக்கச் செய்யும் ஒரு பயங்கர மாதம் என்ற நிலை வளர்ந்துவிட்டது.

மூன்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட தஞ்சைப் புயலும், இதே மாதத்தில்—அதாவது 1952-ம் ஆண்டு நவம்பர் 30-ந் தேதியுடன் தான் தோன்றியது ; அதன் விளைவாக தாங்கொணாத் துயரச் சம்பவங்கள் நிகழ்ந்து மக்கள் வீடு, வாசல், கால்நடைகள், உயிரையும் இழந்து அல்லலுற்றனர் ; தஞ்சை மாவட்டம் முழுவதையுமே அந்தக் கோரப் புயல் சின்னபின்னமாக்கியதை என்றும் மறக்கமுடியாது.

1952 நவம்பர் 30-ந் தேதியன்று நாகப்பட்டினத்திற்கு வடக்கே உருவாகிய புயல் பெரும் அழிவை ஏற்படுத்தியது ; நாகப்பட்டினத்தைச் சுற்றியுள்ள 5 மைல் சுற்றுவட்டாரப் பகுதிகளெல்லாம் பெரும் வெள்ளத்தில் மூழ்கின.

தஞ்சை மாவட்டத்தில் அந்தப் புயலின் விளைவாக மொத்தம் 349 பேர் கொல்லப்பட்டனர் ; 26,053 கால்நடைகள் சேதமுற்றன ; 35,230 வீடுகள் சேதமடைந்தன ; 1,62,412 வீடுகள் அடியோடு சரிந்து நாசமாயின ; 2,532 ஏகர் வெற்றிலைக் கொடிக்கால் பாழாயிற்று ; 12,692 ஏகர் வாழைத் தோட்டம் சின்னபின்னமாயின ; அறுவடைக்குத் தயாராக இருந்த நஞ்சை நிலம் சுமார் 36,000 ஏகர் அப்படியே வீணாகிவிட்டது ; இவ்வகையில், அந்த ஒரு மாதத்தில் மட்டும் மொத்தமாக, ரூ. 4¾ கோடிக்கும் அதிகம் பெறுமான மதிப்புக்குச் சேதம் விளைந்தது.

திருச்சி மாவட்டத்திலும் மொத்தம் ரூ 70 இலட்சத்திற்கும் அதிக மதிப்புடைய வெற்றிலைக் கொடிக்கால், வாழை, தென்னை தோப்புகள் பாழாயிற்று.

காரைக்கால் பகுதியிலும்கூட ரூ 50 இலட்சம் மதிப்புடைய சொத்துக்களுடன் 42 பேர் உயிர் துறந்தனர்என்பதும்குறிப்பிடத்தக்கது

தஞ்சை மாவட்டத்தில் 17-ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்த இத்தகு சோக வரலாறுகள் அனைத்தும்—ஒரு ஆண்டைத் தவிர, மற்ற ஆண்டுகள் அனைத்திலும் நவம்பர் திங்கள்களிலேயே நிகழ்ந்திருக்கின்றன. புயல் கொடுமை ஏற்பட்ட ஆண்டுகளும், மாதங்களும் கீழே தரப்படுகின்றன :

1. 1631-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 10-ந் தேதி.
2. 1853-ம் ஆண்டு, மார்ச்சு திங்கள்.
3. 1871-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 6, 7-ந் தேதிகள்.
4. 1880-ம் ஆண்டு, நவம்பர் திங்கள்.
5. 1884-ம் ஆண்டு, நவம்பர் 30-ந் தேதி.
6. 1891-ம் ஆண்டு, நவம்பர் திங்கள்.
7. 1897-ம் ஆண்டு, நவம்பர் 12-ந் தேதி.
8. 1903-ம் ஆண்டு, நவம்பர் திங்கள்.
9. 1952-ம் ஆண்டு, நவம்பர் 30-ந் தேதி.
10. 1955-ம் ஆண்டு, நவம்பர் 30-ந் தேதி.

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிக்கை

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் கீழ்க்காணும் அறிக்கையை விடுத்துள்ளார் :—

சமீபத்தில் ஏற்பட்ட புயல், மழையின் காரணமாக மதுரை, இராமனுதபுரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சர்க்கார் உதவி செய்ய முன் வந்திருப்பதை வரவேற்பதோடு, அந்த உதவியை கால தாமதமில்லாமல் உடனடியாகச் செய்து உதவ வேண்டுகிறேன்.

மதுரை, இராமனுதபுரம் மாவட்டங்களில் இருக்கும் தி. மு. கழக (கிளை) தோழர்கள், ஆங்காங்கு புயல்,மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் இயன்ற அளவு உதவி செய்வதோடு, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் நேரில் சென்று விபரம் சேகரித்து, மதுரை மாவட்ட தி. மு. கழகத்திற்குச் செய்தி அனுப்ப வேண்டுகிறேன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

★

பெரும் புயல் விசியதன் காரணமாகத் தஞ்சை—திருச்சி—மதுரை—இராமனுதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருங்கேடுகளுக்கு உள்ளாகியிருப்பதாலும், கிளைக் கழகங்களை நிவாரண வேலைகளில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும், புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டியிருப்பதாலும் 18—12—55 ஞாயிறன்று குடந்தையில் நடக்க இருந்த பொதுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பொதுக்குழுக் கூட்டம் கூட்டும் விபரத்திற்குப் பின்னுல் அறிக்கை வெளியிடப்படும்.

"அறிவகம்,"
சென்னை—13
7-12-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

பெருந்துறை

9—12—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். அப்பாவு

★

தக்கோலம்,
கல்யாண மண்டபத்தில்
9-12-55 மாலை 5½ மணிக்கு
தலைவர் : கே. ஆர். மாணிக்கம்
பேசுவோர்:
அருண்மொழி
சேங்குட்டுவன்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

டிச. 9 பெருந்துறை
10 ஈரோடு
11 கோபிசெட்டிப் பாளையம்
18 பொன்னேரி
25 பெங்களூர்

நகர இளைஞர் கழகம்

8—12—55 மாலை 6½ மணிக்கு, சென்னை-சூளை, மாணிக்கச் செட்டித் தெரு, மேற்படி கழக மனையில், 'பொதுநலத் தொண்டில் எனது அனுபவம்' என்னும் பொருள் குறித்து திரு எம். என். ரங்கனுதன் பேசுவார்.

ஆப்கன் பாதுகாப்பு அமைச்சர் விலகிறாம்!

பெஷாவர், டிச. 6—

இராணுவத் தளவாடங்கள் சரிவர இல்லை என்ற காரணத்திற்காக, ஆப்கன் பாதுகாப்பு இலாகா அமைச்சர் அரிப்கான், தமது பதவியை இராஜினுமா செய்தார் என்றும், அவரது விலகலை பிரதமர் தாவூத்கான் ஏற்றுக்கொண்டார் எனறும் தகவல் கிடைத்திருக்கிறது.

இரண்டொரு தினங்களுக்கு முன், அமைச்சர் அரிப்கான் பதவியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிருர் என்று வெளிவந்துள்ள செய்தி மறுக்கப்பட்டுள்ளது.

தற்போது பாதுகாப்பு இலாகாவையும் பிரதம மந்திரி தாவூத்கானே மேற்கொண்டு வருகிருர் என்றும் கூறப்படுகிறது.

ரூ. 34 செலவில் 900 மைல்!

புதடில்லி, டிச. 4—

ரூ. 34 செலவில், 900 மைல்கள் செல்லக் கூடிய புதிய டீசல் எண்ணெய் கார்களை உற்பத்தி செய்வது குறித்து, ஜெர்மன் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகட்கும்—இந்திய சர்க்காருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

இவ்வகைக் கார்கள் மிகவும் சிக்கனமானவை என்றும், தற்போது இந்தியாவில் இதுபோன்ற 4 கார்கள் உபயோகத்தில் இருந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

ஜாம்ஷெட்பூரில் உள்ள டெல்கோ தொழிற்சாலை நிறுவனத்தில், இந்த 180 டீசல் கார்களும் உற்பத்தி செய்யப்படலாம் என்றும் தகவல் தெரிகிறது.

திருமணம்

7—11—55 பகல் 11½ மணிக்கு கடலூர் ஓ. டி. 2-வது வட்டம் தி. மு. கழகத் தோழர் எஸ். அஜீஸ்—தோழியர் கைருன்னிசா பேகம் திருமணம், புதுவை தென்னண்டை புல்வார் 9-ம் எண்ணுள்ள இல்லத்தில்நடைபெற்றது. பல கழகத் தோழர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.